*1999 ஏப்ரல் 21*] [கலைஞர் மு. கருணாநிதி]

50 ரூபாய் கேட்டார் என்று. அவருடைய பெயரை தயவுசெய்து நம்முடைய உறுப்பினர் அப்பாவு அவர்கள் தெரிவிப்பாரேயானால், உரிய நடவடிக்கை மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் மூலமாக எடுக்கப்படும் என்ற உறுதியை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றவர்களுடைய நிலையை உணராமல், அந்த நேரத்திலும் காசு சம்பாதிக்க எண்ணிய அந்தக் Compounder மனிதராகவே இருக்க முடியாது. விலங்கோடு சேர்க்கப்பட வேண்டியவர். அவருடைய பெயரை அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குடும்பத்திற்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இருந்தாலும் இதுபோன்ற சூழ்நிலைகளில், ஒருவர் கள் வியாபாரம் செய்வது இன்னொருவர் சாராய வியாபாரம் செய்வது, இருவரும் மோதிக்கொண்டு, வீட்டிலே உள்ள குடும்பத்தினர், பெண்டு, பிள்ளைகள் எல்லாம் அகால மரணமுறுவது என்பது ஒரு சோகமான செய்தி என்றாலும்கூட, இப்போது உயிரோடு மிஞ்சியுள்ள காசி நாடார் அவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு இலட்ச ரூபாய் வழங்கப்படும், சிறப்பு நிதியாக என்று தெரிவித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. விதி 110-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை

### கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜர் மணிமண்டபம் கட்ட மத்திய அரசின் அனுமதி பற்றி முதலமைச்சரின் அறிக்கை

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், நான் Order of Business-ல் வரவேண்டுமில்லையா? அதற்குள் நீங்கள் எழுந்து நின்று வரிசையாகக் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி? பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் காமராஜர் மணிமண்டபம் கட்டுவது பற்றி ஒரு செய்தியை இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 ஏப்ரல் 21

19-4-1998 அன்று, கடந்த ஆண்டு, நாகர்கோயிலில் நடைபெற்ற ஜீவானந்தம் மணிமண்டபம் திறப்பு விழாவிலே பேசும்போது, கன்னியாகுமரியிலே காமராஜர் அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில், அவர்கள் நினைவாக மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்பை நான் செய்திருந்தேன். பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் அமைப்பதற்கான இடம் மத்திய அரசின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் 27-9-1996 ஆம் நாளிட்ட ஆணையின்படி, கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தொலைவிற்குள் கட்டடங்கள் கட்டக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டப் பகுதியாகும். எனவே, இதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்காக தமிழக அரசின் சார்பில் 7-8-1998 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. இந்தக் கடிதத்திற்கு மத்திய அரசின் சுற்றுபுறச்சூழல் மற்றும் வனத் துறை அனுப்பிய 7-10-1998 தேதிய பதில் கடிதத்தில் மேலும் சில விவரங்களைக் கோரியிருந்தார்கள். அந்த விவரங்கள் தமிழக அரசின் சார்பில் 21-1-1999 அன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. மேலும் இதற்கு நினைவூட்டுக் கடிதம், Reminder ஒன்று 22-2-1999 அன்று அனுப்பப்பட்டது. இதற்கு மத்திய அரசு அனுப்பிய பதில் கடிதத்தில் அந்த இடத்தில் நினைவகம் கட்டுவதற்கு அனுமதிப்பதற்கு இல்லை என்றும், அது தடை செய்யப்பட்ட இடம் என்றும், எனவே பரிசீலனை செய்வதற்கு இல்லை என்றும் தெரிவித்திருந்தார்கள். இதுபற்றிய விவரங்களை நிதிநிலை அறிக்கைக்குப் பதிலளிக்கும்போது நான் அவையிலே விளக்கியதோடு, 1-4-1999 அன்று மீண்டும் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் பிரதமர் அவர்கள், இந்தப் பிரச்சினையில் தனிப்பட்ட முறையில் தலையிட்டு அந்த இடத்திலேயே பெருந்தலைவர் காமராஜர் நினைவிடம் கட்டுவதற்கு ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி அனுமதிக்க வேண்டுமென்று எழுதியிருந்தேன்.

முற்பகல் 10-40

மேலும் 19-4-1999 அன்று தமிழக அரசு சார்பில் மத்திய அரசுக்கு அனுப்பிய Fax செய்தியில் குறிப்பிட்ட இடத்திற்கு அருகிலேயே காந்தி மண்டபம் உள்ளது என்றும், மேலும் பல கட்டடங்கள் அந்தப் பகுதியிலே கட்டப்பட்டுள்ளன என்றும், எனவே அந்த இடத்தை, கடற்கரை ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பகுதி II என்று எடுத்துக்கொண்டு அங்கேயே காமராஜர் மணி மண்டபம் கட்ட அனுமதிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. இதற்குப் பிறகு நேற்று இரவு மத்திய அரசின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள Fax செய்தியில் குறிப்பிட்டுள்ள தகவல் வருமாறு:

*1999 ஏப்ரல் 21* ] [கலைஞர் மு. கருணாநிதி]

கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபத்தை அடுத்துள்ள நிலப் பகுதியை CRZ-I என்பதிலிருந்து CRZ-II என மறுவகைப்படுத்தல் என்ற தலைப்பில் அனுப்பியுள்ள செய்தி:

கன்னியாகுமரியில் திரு. காமராஜருக்கு நினைவகம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கடற்கரையோர நிலப் பகுதியை CRZ-I என்பதிலிருந்து CRZ-II என மறுவகைப்படுத்தல் குறித்த முன்மொழிவை இந்த அமைச்சகம் பரிசீலித்து ஒப்புதல் அளித்துள்ளது என்ற செய்தி வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பகுதியிலே எந்தவொரு வளர்ச்சிப் பணியையும் மேற்கொள்ளும்போது பின்வரும் நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது:

(அ) எதிர்காலத்தில் வணிக அல்லது குடியிருப்பு வளாகங்கள் அங்கே கட்டப்படக் கூடாது;

(ஆ) அழகைக் காத்தல், பொதுமக்கள் நடமாட்டம் ஆகியவற்றைப் பராமரிப்பதில் வல்லுநர்களுடைய அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று அதிலே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த அனுமதியை வழங்கியதற்காக, ஒப்புதல் வழங்கியதற்காக மத்திய அரசுக்கு தமிழக அரசின் சார்பிலும், தமிழ் மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (ஆ) மதுரா கோட்ஸ் நிறுவனத்தின் ஒரு பிரிவு மூடப்போவதாக வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. Madura Coats Limited நிறுவனத்தின் Madura Coats ITMS பிரிவு மூடப்போவதாக வந்துள்ள அச்சுறுத்தலால் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அவ்வறிவிப்பை மட்டும் படிக்க வேண்டும். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** (குறுக்கீடு) அது இங்கே இல்லை, இதிலே இல்லை.